TNPSC JOB

# அரையாண்டுத் தேர்வு-2025

## தமிழ்

வகுப்பு : **8** | பதிவு எண் :

காலம் : 2.30 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

**குறிப்புகள்:**

- ❖ மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- ❖ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- ❖ தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி-I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15x1=15

1. பெரிய கப்பல்கள் ..................மீது செல்லும்.

அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி

2. மலர்களிலிருந்து வரும் ...................... வண்டுகளை ஈர்க்கும்.

அ) மந்தம் ஆ) அந்தம் இ) சந்தம் ஈ) கந்தம்

3. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ............ பெருகிற்று.

அ) காரி ஆ) ஓரி இ) வாரி ஈ) பாரி

4. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......................

அ) கச+ டற ஆ) கசட+ அற இ) கசடு+ உற ஈ) கசடு+ அற

5. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழமைய தமிழ் எழுத்து ............. என அழைக்கப்படுகிறது.

அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

6. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ................ நீட்சியாகவே உள்ளது.

அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்

7. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது .......................

அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

8. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில் இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுக்கட்டில்

9. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ...................

அ) மார்பு ஆ) தலை இ) மூக்கு ஈ) கழுத்து

10. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ...............

அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

11. 'கரையில் சேர்ப்பான்' என்பது ................

அ) செய்வினை ஆ) செயப்பாட்டு வினை இ) தன்வினை ஈ) பிறவினை

**பொருத்துக**

12. கிழக்கு – பெரும்பாலை
13. மேற்கு – பழனிமலை
14. வடக்கு – வெள்ளிமலை
15. தெற்கு – மதிற்கரை



TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

## பகுதி-II

### பிரிவு -1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**குறுகிய விடையளிக்கவும். ( 21வது வினா கட்டாய வினா)** **4x2=8**

16. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.
    அ) கரிகாலன் கல்லணையைக் கட்டினார்.
    ஆ) ஏற்காடு ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகிறது.
17. பட்ட மரம் எதனை நினைத்துக் கவலை அடைந்தது ?
18. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை ?
19. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது ?
20. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது ? ஏன் ?
21. ' தக்கார்' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு-2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**குறுகிய விடையளிக்கவும்.** **5x2=10**

22. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.
    அ) பொருள்பட இரு சிலேடை ஆகும் இலக்கியம் பாடும்.
    ஆ) உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ள வரையிலும்.
23. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    அ) சிரம் என்பது .................. ( தலை / தளை )
    ஆ) இலைக்கு வேறு பெயர் .............. ( தளை / தழை )
24. பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.
    அ) குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை ஆகியன ஐந்திணைகள்
    ஆ) நல்லவன் வாழ்வான் தீயவன் தாழ்வான்
25. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக.
    அ) Medical Plant ஆ) Punctuation
26. தொடர்களை மாற்றுக.
    அ) காடு மிகவும் அழகானது ( உணர்ச்சித் தொடராக்குக )
    ஆ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத் தொடராக்குக )
27. சரியான இணைச்சொல்லை இட்டு நிரப்புக.
    ( மேடுபள்ளம், ஈடுஇணை, கல்விகேள்வி )
    அ) சான்றோர் எனப்படுபவர் ................ களில் சிறந்தவர் ஆவர்.
    ஆ) ஆற்று வெள்ளம் ................ பாராமல் ஓடியது.
28. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    அ) பூ ....................( கொய் / பறி)
    ஆ) கோழி .................. ( கூவும் / கொக்கரிக்கும்)

## பகுதி- III

### பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

29. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை ?



TNPSC JOB | www.tnpscjob.com

30. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பிரம்பு என்பது கொடி வகையைச் சேர்ந்த தாவரம். இது நீர் நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண் குகைகளிலும் செழித்து வளரும். தமிழ்நாட்டில் இப்போது அருகி விட்டது.

அ) கொடி வகைத் தாவரத்திற்கு ஒரு சான்று தருக.

ஆ) பிரம்பு எப்பகுதியில் செழித்து வளரும் ?

இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு எழுதுக.

## பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**சுருக்கமாக விடையளிக்கவும். ( 34வது வினாவுக்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** 2x3=6

32. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

33. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார் ?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) " மாமழை போற்றுதும் " எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடல். **(அல்லது)**

ஆ) "ஆற்றுதல்" எனத் தொடங்கி "நோன்றல் வரை" உள்ள பாடறிந்து ஒழுகுதல் பாடல்.

## பிரிவு-3

2x3=6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

35. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன ?

36. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை ?

37. தன்வினை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

## பகுதி- IV

5x5=25

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

38. அ) ஏட்டில் எழுதிய் பழங்கதையாக முடிந்தவை எவை ?

**(அல்லது)**

ஆ) புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?

39. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் தெருவில் குப்பைத்தொட்டி அமைத்துத் தர வேண்டி ஊராட்சி மன்றத் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

40. ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

அ) அணி –

ஆ) படி –

இ) திங்கள் –

ஈ) ஆறு –

உ) மாலை –

41. பின்வரும் மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) ஆயிரங்காலத்துப் பயிர் | – | இயலாத செயல். |
| ஆ) கம்பி நீட்டுதல் | – | இருப்பது போல் தோன்றும்; ஆனால் இருக்காது. |
| இ) கல்லில் நார் உரித்தல் | – | ஆராய்ந்து பாராமல். |
| ஈ) கண்ணை மூடிக் கொண்டு | – | விரைந்து வெளியேறுதல். |
| உ) கானல் நீர் | – | நீண்ட காலமாக இருப்பது. |



TNPSC JOB | www.tnpscjob.com

42. இயற்கையைப் பாதுகாப்பதில் உன் பொறுப்புகள் ஐந்தினை எழுதுக.

1) மரம் நட வாய்ப்புள்ள இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.

2) ____________________

3) ____________________

4) ____________________

5) ____________________

6) ____________________

## பகுதி- V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3x8=24**

43. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

44. அ) ' வெட்டுக்கிளியும் சருகுமானும் ' கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) ' காலம் உடன் வரும் ' கதையைச் சுருக்கி எழுதுக.

45. அ) 'நான் விரும்பும் கவிஞர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை.

********************************



TNPSC JOB | www.tnpscjob.com